தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் ஊரக்கரை ஊராட்சி செயல் அலுவலர்/ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறை

முன்னிலை:திருமதி.S.ரேணுகாதேவி

ந.க. 008 /2023 நாள்:26/04/2024

பொருள்:

மனை இறுதி ஒப்புதல் அனுமதி ___ தா.பேட்டை ஊராட்சி ஒன்றியம் ஊரக்கரை ஊராட்சியில் ஊரக்கரை கிராமத்தில் புல எண்கள் 837/1B2, 837/1B3, 837/1B4, 837/1B5 – ல் கட்டுப்பட்ட 6350 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள உத்தேச குடியிருப்பு 34 மனை பிரிவு இடத்திற்கு இறுதி மனை ஒப்புதல் தொடர்பாக அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:

1. திருத்தப்பட்ட ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் அரசாணை எண்.255 நாள் 18.08.1994.
2. திரு. ரத்தினம்பிள்ளை அவர்களின் விண்ணப்பம் நாள்01/09/2023 Online Application No.LKOSUTM5, நாள் 01/09/2023.
3. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் கடிதம் இதே எண் நாள் 21/10/2023 (மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதலளிக்கப்பட்டது.
4. இணை இயக்குநர் வேளாண்மை துறை திருச்சிராப்பள்ளி நாள்:21/09/2023.
5. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி கடிதம் எண்: QOUOXXY2/2023 நாள் :21/10/2023 (மனுதாரரிடம் கட்டணம் கோரப்பட்டது).
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 19799/2022/போ, நாள் 24.12.2020.

7. திரு. ரத்தினம்பிள்ளை அவர்களின் கடிதம் நாள் 31.10.2023

8. அரசாணை எண்.18 மற்றும் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04/02/2019 மற்றும் 31/01/2020.

9. அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி UD4(3) துறை நாள் :23/09/2020

10. அரசாணை எண்.181 , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி UD4(1) துறை நாள் :09/12/2020

11. அரசு கடிதம் எண் 181, 19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்:30/08/2017.

12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017/LA1> நாள்: 08/09/2017

13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.320/2022/வுCP3>நாள்:07/01/2022.

14. நகர் ஊரமைப்பு இயக்குநர்,சுற்றறிக்கை நாள்:01/11/2023

15. திரு. ரத்தினம்பிள்ளை அவர்களின் கட்டண நாள் :02/11/2023.

16. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின்

4367/2019/TCP2 நாள்:14/10/2019.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த /உயர் அழுத்த மின் கம்பி பாதை /தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறு மனுதாரர் தமது சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையில் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய தலைவர், ஊரக்கரை ஊராட்சி அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி/இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்தற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர் நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6"X4" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

S. Rengaraj

தலைவர்

ஊரக்கரை ஊராட்சி

பெறுநர்:

Mr. ரத்தினம்பிள்ளை
3/56, தெற்கு தெரு, ஊரக்கரை ,
முசிறி வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்-621214.

நகல்:

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி.
2. சார் பதிவு அலுவலர்,தா.பேட்டை.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),ஊராட்சி ஒன்றியம், தா.பேட்டை.